UNIVERSITY L E,
JAFFNA, SRI LANKA


# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 142 JAFFNA, FRIDAY, 7th MAY, 1982 No. 19

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



**Editor's Note**

Please address all communication for the English pages to The English Editor, 'Morning Star' UDUVIL, CHUNNAKAM



**Subscription**

Inland: Rs. 35/- per year. Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*

The Manager, 'Morning Star', Vaddukoddai.


*Church News from Abroad*

**Executive Secretary for Evangelism** —

Mr. Raymond Fund, Director Christian Industrial Committee, has taken up the new post in the World Council of Churches of Executive Secretary for Evangelism.

**The Rt. Rev. D. C. Gorai** of the Barrackpore Diocese and the Deputy Moderator of the Church of North India has been elected as the Bishop of Calcutta.

**Tourism and the Church** —

The Christian Conference of Asia, along with other ecumenical bodies has formed an Ecumenical Coalition on Third World Tourism. Peter Holden, former Secretary of the South Australian Council of Churches is to be the Coalition's First Excutive Secretary.

The Coalition does not want to end tourism but rather to work for alternative tourism that is wholesome, creative and just.

**Zambia's Minister of National Guidance** has declared that his is a Christian country and will remain so until the end of time. He added that is one reason every state dinner starts with a prayer.

## Sri Lanka Universities — 1982

*5245 admissions* will be made to the eight Universities of Sri Lanka this year. 32,000 have qualified for admissions *but only 21,000 have sent in their applications to the University Grants Commission.*

One per cent in each discipline is reserved for the "foreign students quota". These students will be selected on qualifications equivalent to the local Advanced Level, obtained abroad. 200 students have applied for 4 places in medicine.

The largest University in Sri Lanka is the *Peradeniya* University with an enrolment of 1420 students. Next comes the *Sri Jayawardenapuram* University with 950 students.

Student distribution to the other universities are: *Colombo* — 850; *Kelaniya* — 740; *Jaffna* — 385; *Moratuwa* — 270; *Ruhuna* — 385; and *Batticaloa* — 75.

Cabinet approval for Rs. 12 million is being sought to improve the Batticaloa Campus. Prof. David Walton has been loaned by the University of Sussex for one year to organise the Chemistry and Physics Departments.

Faculty wise the admissions are as follows:— Arts — 2150; Law — 75; Commerce — 325; Medicine 400; Dental — 60; Vet. Science — 40; Agriculture — 205; Bio-Science — 440; Phy. Science — 590; Engineering — 480; Architecture 40.

*Sri Lanka Educational Service*

## 'Cluster Schools' in the North

An experiment is to be made, beginning from the middle of this month of establishing 'Cluster schools' in the Kilinochi and Pungudutivu Electorates. A team from the Ministry of Education was in Jaffna recently and held conferences at the Kilinochi Maha Vidyalaya and Pungudutivu Maha Vidyalaya. The Members of Parliament representing these electorates were also invited for these conferences.

The two schools referred to have been chosen as 'cluster schools for the electorates.

**Deployment of Staff in the North**

Messrs. K. Ponnambalam, CEO (Science) Jaffna and K. Thiagarajah CEO Chavakachcheri have assumed duties as Education Officers at the Office of the Director of Education, NR.

Mr. S- Sellathurai CEO (Science) from Mullaitivu has been transferred to Jaffna in the same capacity and Mr. K. Somasundaram, CEO, Education Officer Jaffna has been transferred to Chavakachcheri in the same capacity.

**New Appointments as Teachers**

The Kilinochi Electorate has been assigned the largest number of those who were recently recruited, Out of a hundred who received appointments on a disdistrict basis, as many as 60 have been posted to Kilinochi.

In the meanwhile, according to news reports, two teachers posted to Poonery and Pt. Pedro (East) have not yet reported for work.

*The Tamil Eelam Liberation Front*

## Seminar at Nallur

The members of the *TELF*, under the leadership of Dr. S. A. Tharmalingam, had a Seminar at Nallur 30-4-82. The statue of King Sankily on horseback, at *Muthirai* junction *(முத்திரைச் சந்தி)* was garlanded before the commencement of the Seminar.

Dr. S. A. Tharmalingam, a veteran Tamil Leader speaking at the Seminar said that though Tamil leaders may change, the Tamil people will not change. We may not belong to the Tamil United Liberation Front but we belong, said the Doctor to Tamil Liberation Front.

Kovai Mahesan speaking at the Seminar referred to the meeting they had at the foot of the Chelva Memorial on 26-4-82 and the inspiration they had always drawn from the policies from their Founder — leader, Thanthai Chelvanayakam. The speaker expressed disapproval of those who boasted that they would March to Sangilithoppu on 29-4-82 but later marched to Kotte.

JAFFNA COLLEGE

has pleasure in inviting you to its

**ANNUAL PRIZE-GIVING**

on

Saturday 15 May, 1982 at 5-30 p. m.

**Dr. (Mrs.) Maheswary M. Arulchelvam**

B. A. Hons., D. Phil (Oxon)

*Senior Lecturer, University of Peradeniya*

and

**Mr. Arulchelvam**

will be the Chief Guests:

**Miss C. V. Selliah,** B. A., M. Ed.,

*Principal, Uduvil Girls' College*

will distribute the prizes.

Vaddukoddai
4th May, 1982.

**A. Kadirgamar,**
Principal.

## Seminar on "Development Council"

At a Seminar held recently at Pt. Pedro under the auspices of the Pt. Pedro Study Circle the chief speaker was Mr. S. Nadarajah, Chairmen of the Jaffna District Development Council.

While self determination was the Ultimate political goal of the Tamil community the Development Council was a means of making the best use of all the available resources at our command to improve the lot of our people so that they may become strong economically.

The entire local government service is under the Development Council. Fifteen governmen departments are under the control of the DDCs. As chairman, Mr. Nadarajah said he has not relegated to the District Minister any of his authority over these fifteen departments.

In fact, the speaker said there was a proposal that at least in the matter of providing jobs, the subject may be given over to the District Minister. But he had not accepted that position and his stand was endorsed by President Jeyawardene.

There is an on going Dialogne now between the Government and the TULF. But this Dialogue has no direct bearing on the work of the Development Council.

The Jaffna District Development Council will have as its nucles, a Fund which is made up of the Decentralised Budget allocations of the eleven Members of Parliament in the Jaffna District and the revenue derived from local government taxes.

The Ministries have also come forward to give an allocation to each Development Council from their funds.

We have to make the best use of this nubleus we have, to develop our district.

Participants at this Seminator included the officials from the Local government departments at Valvettithurai and Pt. Pedro.

## IN MEMORIAM

**DANFORTH — Joseph Stephen Ariaratnam**

*So quiet and quickly came his call*
*His sudden death shocked us all.*

Affectionetely remembered by his sorrowing wife Navamany and children on his birthday, 11th May.

"Danforth-House",
Uduvil,
Chunnakam.

## TULF — MP on 'Unity Talks'

"We do not carry on a dialogue with political parties. We do so from time to time only with the government of the country as Thanthai Chelvanayakam did, with the Srimavo Bandaranayake government on several occasions, one of which was when Kasiananthan and others were put behind bars by the SLFP".

So said Mr. V. Tharmalingam MP at the May Day Meeting at Town Hall, Jaffna. The TULF cannot be frightened by pelting stones at the jeeps of TULF members of Parliament.

As a party we are following the tradition laid by the Founder of holding 'talks' with the ruling party from time to time to resolve our differences. We have never aligned ourselvee with any political groups to achieve our objectives.

## Home Guard Units

Ten persons from every Grama Sevaka Area would be selected for appointments as Home Guards. Such persons will be given police training.

They will serve in the AGA's divisions and there will be and Advisory Committee on a District basis to see that they function satisfactorly.

The rote of Home Guards will be to defend their native soil against aggressions.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

'நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்'

மலர் 142 ] 7 — 5 — 1982 [ இதழ் 19

## திருமரணத்தியானத்திஞலாய பயன்

கிறிஸ்து இயேசுவின் சிலுவை மரண "ஆண்டு விழா" இன்னுமொரு தடவை வந்து போனது. அதைக் கொண்டாடிய களைப்பு நீங்கி ஒருவாறு நமது வழமையான வாழ்க்கை முறைக்குள் இப்பொழுதுதான் சென்று கொண்டிருக்கிறோம் — இன்னுமோர் ஆண்டு நிறைவு வரும் வரையும்.

அதனாலென்ன? பயனேதையும் கண்டு பாடமேதையும் கற்றோமா? தனியாட்களாகவோ திருச்சபையாகவோ என்னத்தைப் பெற்றோமென்பது சிந்திப்போர் சிந்தைவிட்டகலாக் கேள்வியாகும்.

பார்க்கப்போனால் சிலுவை மரணத்திற்கும் அதற்கு ஆளாக்கப்பட்ட கிறிஸ்துவுக்கும் தொடர்பென்னவென்றே நாம் கேட்கவும் கூடும். ஆங்கில நாடக ஆசிரியர் ஜோர்ஜ் பேர்னாட் ஷா 'சிங்கமும் அந்திரக்கிலேயுவும்' என்ற தமது நாடகத்திற்கெழுதிய நீண்ட முகவுரையிற் சிந்தனைக்குரியவொரு விடயத்தைத் தருகிறார்.

> கிறிஸ்துவைப் பிடித்து ஒரு கம்பத்திலேற்றி நாம் கொலை செய்தோமென்னுலும் ஏதோவொரு வகையில் அக்கம்பத்தை அவர் தமக்கு வாய்ப்பானவொன்றாக்கிவிட்டார் (Though we crucified Christ on a stick, He somehow managed to get hold of the right end of it) எனவும் நாம் கூட, இன்னும் சற்று நல்லவர்களாயிருப்பின் அவர் போலச் செய்து பார்க்கலாம் எனவும் ஒரு நூதனமான உணர்ச்சி நம்மைத் தட்டிக் கொண்டே வந்திருக்கிறது.

கிறிஸ்துவின் முறையை ஒரிருவர் பின்பற்ற முயற்சித்தனர் தான்; ஆயினும் அவர்கள் முயற்சிகள் யாவும் கோமாளித்தனமாய் முடிந்துவிட்டதென ஷா கூறுகிறார். கௌரவமுள்ள மக்களோ அவ்வாறு செய்து பார்த்ததேயில்லை.

இன்னும் சிறிதளவு ஆராயின் தமக்கு வந்த சிலுவையைக் கிறிஸ்து தமக்கு வாய்ப்பாக்கிக் கொண்டார் என்பது கூடப் பொருத்தமற்றதெனலாம். அவர் தாமாகவே சிலுவையை நோக்கிச் சென்றார்; அதை ஏற்பதற்கு ஆயத்தமாய்ப் போனார் என்பதே பொருத்தமாகும். "ஆண்டவரே, ஏன் எருசலேமுக்குப் போக எத்தனிக்கிறீர்? அங்கே தானே உம்மைக் கொன்றுபோட வகை தேடுகிறார்களே!" என அவருடைய நண்பர் தடுத்தது நமக்கு ஞாபகம்.

எனினும் கோழை போல் அவர் புறங்காட்டி ஓடவுமில்லை; பயந்தவராய் வீரமற்றுத் தம் இலட்சியத்தின் வழிதவறிப் போகவுமில்லை. சிலுவையைக் கண்டார்; அதன் தேவையையுங் கண்டார். அதை நோக்கிச் சென்று, தாமாகவே ஏற்றுக்கொண்டு அதைத் தமது இலட்சியம் நிறைவேறத் துணையான கருவியாய் ஆக்கிக் கொண்டார். சிலுவையைக் கொண்டு வெற்றி சிறந்தார். இது சரித்திரம்.

அதைத் தான் தமது சபைக்கும் அவர் கடமையாய்க் கொடுத்தனர். பணத்துக்கும் பதவிக்கும், பிறபல லோகார்த்த நன்மைகட்கும் நீசி நியாயத்தையும், சமாதானம் சகோதரத்துவத்தையும் அடைமானம் வைக்கும் உலகிலே நிலைகளைத் திருத்த முயலும் திருச்சபையைச் "சிலுவையிலறையுங்கள்" எனக் கூக்குரலிடுவோர் இருக்கத்தான் செய்யும். பலவகைத் தோற்றங்கள் வடிவங்களில் இச்சிலுவை அதன் முன் வைக்கப்படவும் கூடும்; காலங்களுக்கூடாய்ப் பற்பல நாடுகளிலும் அவ்வண்ணம் வைக்கப்பட்டதைக் கண்டுமிருக்கிறோம் திருச்சபைக்குச் சிலுவை அவசியமே.

எனினும், நாமேன் சிலுவையைச் சுமக்க வேண்டும்? பட்டம் பதவிகளை இழப்பதால் நாம் காணும் பயனென்ன எனக் கேட்கும் (பல நாட்டுச்) சபைகளையும் சபையாரையும் நாம் காண்கிறோம் அவர்கள் சிலுவை மரணத் தியானத்தால் போதிய பயன் பெருதார் என்கில் பிழையாகாது. மற்றப்பக்கமாக, இவ்வாண்டின் திருமரணத் தியானத்தின் விளைவாக இன்னும் சில தரித்திரர்க்குச் சுவிசேடம் பிரசங்கிக்கப்பட்டிருக்குமாயின், இருதயம் நருங்குண்ட இன்னும் சிலர் குணமாக்கல் பெற்றிருப்பின், சிறைப்பட்டோர் விடுதலை பெற்றிருப்பின் குருடர் பார்வை கொண்டிருப்பின், நொறுங்குண்டோர் விடுதலை கண்டிருப்பின் திருச்சபை தன் ஆண்டவரின் ஆஞ்ஞையைச் சிந்தையிற் கொண்டதெனச் சொல்லலாம்.

---

செய்திகள்

### சர்வகலாசாலைப் பிரவேசம்

இந்த வருடம் சர்வகலாசாலைகளிற் சேர்ந்து கொள்வதற்குத் தராதரம் பெற்ற மாணவர் தொகை சுமார் 82,000. இவர்களில் 21 000 மாணவரே சர்வகலாசாலைகளிற் சேர்வதற்கு விண்ணப்பித்துள்ளனர் இவர்களிலும் நாட்டின் எல்லாச் சர்வகலாசாலைகளுக்குமாக 5245 பேர் மாத்திரமே சேர்க்கப்படுவர்.

மாணவர் அனுமதிப்பாகுபாடு பின்வருமாறு:- கொழும்பு-860; பேராதனை-1420; ஜெயவர்த்தனபுரி-950; களனி-740; மொரட்டுவை-270; யாழ்ப்பாணம்-545; உருகுணை-885; மட்டக்களப்பு-75.

பாடத்துறை வாரியாக இம்மாணவர்கள் பின்வருமாறு பிரிக்கப்படுவர்:- கலைத்துறை-2150; சட்டத்துறை-75; வர்த்தகத்துறை-825; மருத்துவத்துறை 400; பல் மருத்துவத்துறை-60; கால்நடை மருத்துவத்துறை-40; விவசாயத்துறை-205; உயிரியற்றுறை-440; பொறியியற்றுறை-480; கட்டடக்கலைத்துறை-40; விஞ்ஞானத்துறை-590.

இந்தத் துறைகள் ஒவ்வொன்றிலும் ஒரு சதவீதமான இடங்கள் இலங்கைத் தராதரப் பரீட்சைகளுக்குச் சமமான புறநாட்டுப் பரீட்சைகளிற் சித்தியடைந்தோருக்காக ஒதுக்கப்பட்டிருக்கும். இதனால் புறநாடுகளில் வேலை பார்க்கும் இலங்கைப் பெற்றோரின் பிள்ளைகளும், புறநாடுகளிலே படித்தவர்களாயிருந்தாலும் இலங்கைச் சர்வகலாசாலையில் சேர்வதற்கு வசதி பெற்றவர்களாவர்.

---

### இயேசு "எல்லாம் முடிந்தது" என்றார்

(யோவான் 19:30.)

— ஜெயக்குமார் மேதர் —

(முற்றொடர்ச்சி)

Accept the fact you are accepted and saved by the event of the Cross on which Jesus Christ gave himself as Ransom. புதிதாக காலத்திற்குக்காலம், இரட்சிப்பு மாறுபடுவதுமில்லை. ஏற்படுத்தப்படுவதுமில்லை அப்படி ஏற்படுத்தக்கூடுமேயானால் காலத்திற்குக்காலம், மனிதருக்கு மனிதராக, சந்ததிக்கு சந்ததியாக பல 'கிறிஸ்து'க்கள் தோன்ற வேண்டும். பிறந்தவர் ஒரேயொரு கிறிஸ்துவே. பலியானவரும் அவரே. அவரை, அவரின் செயலை சிலுவையில் முடித்தவற்றை இன்று நாம் ஏற்று நடப்பதே எம் மேலான கடமையும், குறிக்கோளுமாகும். கடவுள், கிறிஸ்துவில் நிறைவேற்றிய செயலை நாம் ஏற்றுக்கொள்ளும் கட்டத்தில், அச்சந்தர்ப்பத்தில் நாம் அவருடைய வாரிசுகளாகின்றோம் என்பது புனித பவுலின் கூற்று. (கலா, 4:7). நம்பிக்கை என்பது கண்ணுக்கு தெரியாதவை பற்றிய ஐயமற்ற நிலை. (எபி. 11:1)

எனவே இரட்சிப்பு (மீட்பு) என்பது எமது சுய முயற்சியினால் கைகூடுவதல்ல. அது இறைவனின் கிருபை; சவு இன்று எங்கு பார்த்தாலும் பல குழுக்கள் தோன்றியுள்ளன. இவைகளைச் சேர்ந்தவர்கள் திருச்சபையைச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் திருச்சபையை, அங்குள்ள அடியவர்களை திருடிச் செல்ல சந்தர்ப்பம் எதிர்நோக்கியவர்களாகவே செயற்படுகின்றனர். இவர்கள் யார்...! இவர்கள் திருக்கூட்டத்தினரை திருடிச் செல்ல உபயோகிக்கும் உபாயங்கள் எவை...? இவர்கள் யாரென்று பார்க்குமிடத்தில் இவர்கள் தம்மை ஆவியின் கூட்டத்தினர் எனக் கூறிப் பெருமை பாராட்டுபவர். தாம் மாத்திரம் தூயவர்கள் எனக் கூறிக்கொள்பவர். இவர்களை நோக்குமிடத்தில் தம்மை வளர்க்க, செல்வம் சேர்க்க, மதம் வளர்க்கும் கூட்டத்தினர் என்பது கூருமலே தெளிவாகிவிடும். இவர்களின் முக்கிய வினா என்னவெனில் "நீர் இரட்சிப்பு பெற்றுவிட்டீரா...? அன்றேல் இரட்சிப்பு அடையும் பொருட்டாக நீர் முழுக்கு ஞானஸ்நானம் பெறல் வேண்டும்". இக்கூட்டத்தினர் இரட்சிப்பை எதிர்கால நோக்கிலேயே காண்கிறார்கள். அப்படியானவன் தானாகவே தனது இரட்சிப்பிற்கு வேண்டியவற்றை ஏற்படுத்த முயற்சி செய்கிறவனாகின்றான்.

இவ்விதமாக மனிதன், தனது இரட்சிப்புக்கு தனது முயற்சியை செயற்படுத்த வேண்டுமேயாகில் கிறிஸ்து எமது வாழ்விற்கு புறம்பே தள்ளப்படுகின்றார். கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்வு, பணி, மரணம், உயிர்த்தெழுதல் இவையனைத்தும் மறைக்கப்படுகின்றன. ஏனெனில் கிறிஸ்து சிலுவையில் முடித்த எமது இரட்சிப்புக்கானவற்றை நாம் ஏற்காது நாம் நாமாகவே இரட்சிப்பை ஏற்படுத்த முனைகின்றோம் அல்லவா.........! அப்படியாஞல் கிறிஸ்து இன்றும் மரித்தவராக கல்லறையினுள் புதைக்கப்படுகின்றவராகவே அறியப்படவேண்டும். ஆனால் கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவராக பலருக்கு காட்சி அளித்துள்ளாரே. அவர் உயிர்த்தெழுந்தார் என்பது வரலாற்று நிகழ்ச்சி.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இறைவன் இஸ்ரவேல் ஜனங்களுடன் ஏற்படுத்திய உடன்படிக்கை "நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நான் உங்கள் கடவுளாய் இருப்பேன்" (உபா 6:7) இது புதிய ஏற்பாட்டில் இறைமைந்தன் இயேசுவில், சிலுவையில், நிறைவேறியது. இரட்சிப்பு என்பது மிகப் பரந்த பொருளை உள்ளடக்கிய ஒரு வார்த்தை. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலரை அடிமைத்தனத்தினின்று மீட்டு, சுதந்திர வாழ்விற்கு வழி நடத்திய நிகழ்ச்சி "இரட்சிப்பு" எனப்படுகிறது, காலத்திற்குக்காலம் கடவுள் மனிதர்களில் குறிப்பிட்டவர்களை தெரிந்தெடுத்து, தனது மக்களை அடிமைத்தனத்தினின்று மீட்பதற்காக உபயோகித்தார். உறுதியான சுதந்திரம் இரட்சிப்பு எனக் கருதப்படுகிறது. அதாவது பலவித சூழ்நிலைகளில், அபாயங்களிலிருந்து விடுதலை பெறுவது இரட்சிப்பு எனவும் பழைய ஏற்பாட்டில் கருதப்பட்டது. இஸ்ரவேலர், அசீரியரினால் எதிர்க்கப்பட்டபொழுது பாபிலோனியரினால் சிறைபிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டபொழுது, எருசலேம் ஆலயம் அழிக்கப்பட்டபொழுது, தாம் அனுபவிக்கும் கசப்பான வாழ்வில் தம்மை அவ்வித சூழ்நிலையிலிருந்து, சுதந்திரமற்ற வாழ்விலிருந்து, விடுதலை அருள ஒரு மேசியா வருவார் என எதிர்பார்த்திருந்தனர். (Messianic Hope). அம் மேசியா மறுபடியும் எருசலேம் ஆலயத்தைக் கட்டி எழுப்புவார்; பிளவுபட்ட (வட, தென்) இராஜ்யங்களை ஒன்று சேர்ப்பார் என எதிர்பார்த்தனர், இங்கு இறைவனைத் தவிர வேறு ஒருவரினாலும் இரட்சிப்பு கைகூடாது என நம்பினர். ஏனெனில் இஸ்ரவேலர் தமது வனாந்தரப் பயணத்தில் இறைவனின் செயலைக் கண்டனர். அனுபவித்தனர். மேசியா எதிர்பார்ப்பு (Messianic Hope) தரும் நிகழ்ச்சியில் கடவுள் உலக வரலாற்றில் தலையிட்டு மக்களை நியாயந் தீர்த்து விடுதலை பெற்றவர்களுக்கு இரட்சிப்பு அருளுவார் என எதிர்பார்த்தனர். இக்கட்டத்தில் இறையாட்சி நிறுவப்படும் எனறு, இரட்சிப்பு என்பதை எதிர்காலத்துடன் தொடர்புடையதாகக் கருதினர். இவ்விதமாகப் பழைய ஏற்பாட்டில் எதிர்பார்க்கப்பட்ட இரட்சிப்பு புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவில் நிறைவேறியது. "காணாமற் போனதைத் தேடவும், அதை இரட்சிப்பதற்கும் (மீட்பதற்கும்) மனுமைந்தர் வந்திருக்கிறார்" (லூக்கா 19:10) அதாவது எதிர்பார்க்கப்பட்ட இரட்சிப்பு வந்தாயிற்று. இயேசு

(3-ம் பக்கம் பார்க்க)

## வேண்டும் சுதந்திரம்

அன்று கற்களை ஒன்றுடன் ஒன்று தேய்த்து நெருப்பினைக் கண்ட மனிதன் இன்று விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் விண்வெளியில் வாழ முயல்கின்றான். இன்று நாம் நவீன உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நவீன உலகில் வாழும் மனுக்குலத்தில் இன்றைய பெண்களின் நிலை என்ன?

அக்காலத்தில் பெண்களுக்கு கல்வி கற்க வாய்ப்பு அளிக்கப்படவில்லை. பாலிய விவாகம் செய்யப்பட்டது. விதவைகள் மறுமணம் மறுக்கப்பட்டது. பெண்கள் தாழ்ந்தவர்களாகவும், ஆண்களுக்கு அடங்கியவர்களாகவும் இருந்தனர். அவளுக்குத் தனியுரிமை கிடையாது. அவள் ஆண்களைப் போலன்றித் தன் குடும்பத்தையே எப்பொழுதும் சார்ந்து வாழ வேண்டிய நிலை இருந்தது.

வேதாகமத்தில் கூட தந்தை வழி மரபு கொண்ட எபிரேயர் சமுதாயத்தில் பெண்களின் நிலை மிகவும் தாழ்வுற்று இருந்தது. சில சமயங்களில் தகப்பன் தன் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்குப் பதிலாகத் தனது பெண் பிள்ளைகளை விற்று விடுவதும் உண்டு. (யாத்திராகமம் 21:7-11) இவ்வாறு அக்காலத்தில் பெண்கள் ஆண்களுக்கு அடிமைகளாகவும், இரண்டாந்தரப் பிரஜைகளாகவும் நடத்தப்பட்டனர்.

காலம் மாறியது. சமுதாயப் புரட்சி, தொழிற் புரட்சி, உலகப் போர்கள் என்பன மக்கள் மனதில் புரட்சியை ஏற்படுத்தியது. மேற்கத்திய நாடுகளிலும் சீனு போன்ற நாடுகளிலும் பெண்களுக்கு சம உரிமை கொடுக்கப்பட்டது.

ஆனால் இந்தியா போன்ற பல வளரும் நாடுகளில் பெண்களின் நிலை மிகக் கவலைக்கிடமாக இருந்தது. சுப்பிரமணிய பாரதியார், பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் பெண் விடுதலைக்காக பெரிதும் போராடினர். பாரதியார்,

"வீட்டிற்குள் பெண்ணை பூட்டி வைத்த
விந்தை மனிதர் தலைகுனிந்தார்"

என்றும்

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த
வகையிலும் நமக்குள்ளே
தாதரென்ற நிலை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழும் இந்த நாட்டிலே"

என்று பாடினர்.

ஆனால் பெண்களுக்குள் சமவுரிமை என்ற பேச்சுப் பெயரளவில்தான் உள்ளது. உலகில் $\frac{1}{3}$ பங்கு பெண்கள்தான் கல்வியறிவு பெற்று சுதந்திரமாக வாழ்கின்றனர். மேலும் அனேக நாடுகளில் பெண்கள் கல்வியறிவால் சிறந்து விளங்கினாலும் அடிமைகளாகத்தான் வாழ்கின்றனர்.

இன்னும் பெண் என்றவுடன் அவள் கீழ்ப்படிபவளாக அடங்கி நடப்பவளாக சாதுவாக மென்மையானவளாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறாள். பெண் என்றால் துன்பங்கள் எல்லாவற்றையும் சகிப்பவள், தனது உணர்ச்சிகளை, மனக் கிளர்ச்சிகளை வெளியே தெரிவிக்க மாட்டாள் என்ற எண்ணமே இன்றும் நிலவி வருகின்றது.

இன்று பெண்களுக்கு நேரிடும் கொடுமைகளில் வரதட்சணை கொடுமையே மிகப் பெரிய கொடுமையாகும். இதன் காரணமாக எத்தனையோ அபலைப் பெண்கள் வாழ வழியின்றி தவிக்கின்றனர். எத்தனையோ பெண்களின் மணவாழ்வு தடைப்பட்டுள்ளது. இன்னும் பல பெண்கள் வரதட்சணை கொடுமையால் கொலை செய்யப்பட்டனர் சிலர் தற்கொலை செய்துள்ளனர்.

மேலும் ரௌடிகளால் பல அப்பாவி பெண்கள் கற்பழிக்கப்படுகின்றனர். சில பெண்கள் தவறான முறையில் நடப்பதற்குத் தூண்டப்படுகிறார்கள். மேலும் தமது பொருட்களை விற்பனை செய்வதற்காகப் பெண்களை போகப் பொருளாக வெறும் சரக்குகளாக காட்டிப் பொருளாக விளம்பரப்படுத்தும் முறையும் நலிந்து காணப்படுகிறது.

உழைப்புச் சந்தையில் கூட அவர்களது நிலை ஆண்களுக்குக் கீழ்த்தான் உள்ளது. இன்று பெண்ணினம் விழிப்படைந்து தமக்கு எதிராக உள்ள தடைகளை தகர்த்து எறிந்து போராடத் தயாராகி உள்ளனர்.

ஆனால் இன்று பெண்களை பெண்கள் அடக்கி ஒடுக்கி நடத்துவதும் உண்டு இன்னும் சில இடங்களில் பெண்கள் தம்மைத் தியாகம் செய்வதன் மூலமும் தம்மை இலட்சிய மனைவி என நினைக்கின்றனர். இது தவறு சம உரிமையும், தேவைகளைப் பூர்த்தி செய்வதும் எல்லா ஆண்களுக்கும், பெண்களுக்கு உரியது என்பதனை பெண்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

வேதாகமத்தை கண் நோக்குவோமெனில், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சில பெண்கள் தீர்க்கதரிசிகளாகவும், சிலர் வீராங்கனைகளாகவும் செயல்பட்டுவந்துள்ளனர். உதாரணமாக தெபோராள் என்ற பெண் தீர்க்கதரிசினி, யோசியா அரசனின் காலத்தில் வாழ்ந்த "உல்தாள்" என்னும் பெண்ணிடம் ஆலோசனை கேட்டதாக வேதாகமத்தில் உள்ளது. அவள் தந்த விளக்கம் நான் பிற்காலத்தில் யோசியா அரசனை மதச் சீர்திருத்தங்கள் செய்யத் தூண்டியதுடன் புனித சுவடிகளைப் பாதுகாத்து வைக்கும் முறையும் முதன்முதலாகத் தோன்றியது. 2 இராஜா 22 : 14)

இயேசுகிறிஸ்துவின் காலத்திலும் பெண்கள் அடிமைகளாகவும், தாழ்மையானவர்களாகவும் கருதப்பட்டனர். ஜெப ஆலயங்களில் கூட பெண்களுக்கு என ஒரு பகுதி ஒதுக்கப்பட்டு இருந்தது. சமூகத்திலும் பெண்களுக்குப் பலவிதமான கட்டுப்பாடுகள் இருந்தன. இயேசுநாதர் இக்கட்டுப்பாடுகளை தகர்த்தெறிந்தார். இயேசுநாதர் பெண்களை ஆண்களோடு சரிசமமாக மதித்து நடத்தினார். மணம் புரியாத பெண்களும் அவரது போதனையை விரும்பிக் கேட்டது மட்டுமன்றி அவருக்கு ஊழியம் புரிந்தனர். அவர் சிலுவையில் மரணமடையும்வரை அவரைப் பின் தொடர்ந்தனர். மேலும் உயிர்த்தெழுந்தவுடன் முதன்முதலாக ஓர் பெண்ணுக்கே தரிசனமானார். (யோவா. 20 : 16)

ஆனால் சீதனக் கொடுமையை ஒழிக்க வேண்டும் என்று மேடைகளில் குரல் எழுப்பும் இளைஞர்களில் பலர் தமக்கு திருமணம் என்றதும் இலட்சம் இலட்சமாக வாங்கித் திருமணம் செய்கின்றனர்.

காதல்! காதல் என்று உயிரை விடும் இளைஞர்கள் கூட கலியாணம் என்றவுடன் காசு! காசு என்று உயிரைவிடுகின்றனர்.

இந்நிலை மாறுதா என். நாம் சுதந்திரமடைந்த சமுதாயத்தில் சமவுரிமை உடையவர்களாக எண்ணப்படுவோம்! பெண்களாகிய நாம் இதற்காகப் போராடுவோம். வெற்றி காண்போம். இறையாசி நம்முடன் கூட இருப்பதாக.

## உயிர்த்தெழுதல் உங்களுக்கும் உரியதுதானு? நிதானமாய் யோசியுங்கள்

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் சரித்திர ரீதியான சம்பவமென்றாலும் அதற்கு சரித்திரத்திலும் பார்க்கக் கூடிய மாத்திரம் ஒன்றுண்டு. அது உலகின் சரித்திரத்தை மாத்திரமல்ல, விசுவாசிக்கும் தனி மனிதனின் சரித்திரத்தையும் மாற்றி அமைக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனின் முடிவும் 2000 ஆண்டுகளுக்கு முன் நடந்த கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலாற் பாதிக்கப்படுகிறது.

எதுவும் அழிந்து போகும் ஓர் உலகினில் நாம் வாழ்கிறோம். ஜீவன் என்ற ஒன்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டு கல்லறையை நோக்கி நகர்கிறோம். பெரியவர்களும், சிறியவர்களும், பணக்காரரும் செல்வந்தரும் மண்ணோடு மண்ணாக என்றோ ஒரு நாள் கலக்க வேண்டும். ராஜ்யங்களும், ராஜாக்களும், பூச்சிகளும், புழுக்களும் உயிருள்ள அனைத்துமே மரிக்கின்றன. இறுதி முடிவு, மரணந்தான் ஆகும். இந்த உலகக் கப்பலில் அற்ப மனுஷராகிய நாம் நம்பிக்கைக்காக எங்கே திரும்பலாம்?

இயற்கையைப் பார்த்துக் கேளுங்கள்; மனிதன் மரித்தால் திரும்பவும் பிழைப்பானு? அதனால் எந்த மறுமொழியையும் சொல்ல முடியாது. அதற்கு உயிர்த்தெழுதலைப் பற்றி ஒன்றுந் தெரியாது. காய்ந்த புல் மறுபடியும் பரிணமித்துத் துளிர்த்துப் பூக்கிறது ஆனால் திரும்பவும் மடிகிறதே. புதைக்கப்பட்ட மணி, புதுத் தளிர் பெற்று முளைக்கிறதே; ஆனால் திரும்பவும் மடிவதற்குத்தான். புதிதாய் ஒரு குழந்தை பிறக்கிறது! இறுதியில் ஒருநாள் மரிப்பதற்குத்தான்;

எல்லாமே ஏமாற்றம். இதைக் கிறிஸ்து தாமே அறிந்திருந்தார். இன்று முளைத்துப் பரிணமித்து நாளை அடுப்பிலே அழிந்து போகும் புல் என்கிறார்.

இலைதளிர் காலத்தை அடுத்து இலையுதிர்காலம் வருகிறது. பிறந்தவர் இறப்பது பொதுமரபு இயற்கை தினமும் இதையே நினைவூட்டுகிறது.

யாரிடத்திற் போவோம் விஞ்ஞானியைக் கேளுங்கள்; இறந்தவன் நித்தியமாய்ப் பிழைப்பானு! கூடிய காலம் வாழவைக்க மாத்திரம்தான் என்னால் முடியும்; ஆனால் நிச்சயம் ஒருநாள் மரிக்கத்தானே வேண்டும் என்பான். விஞ்ஞானியும் கல்லறையோடு நின்று விடுகிறான். பௌதிக நியதியோ பரிசோதனைக் குழாய்களோ உதவப் போவதில்லை தத்துவஞானியைக் கேளுங்கள், கூடு பழுதடைந்தால் கிளி பறந்து விடும் என்கிறான் அவன். எல்லா வழிகளும் மரணத்தில் முடிவடைகின்றன.

எல்லோருக்கும் புதிரான கிறிஸ்துவின் கல்லறை ஒன்று தான் நம் கவனத்தை ஈர்க்கிறது. ஆனால் அதுவும் மர்மம் நிறைந்ததாயிருக்கிறது ஜீவனுள்ள கிறிஸ்துவைத் தனக்குள் அடக்க முடியாமல் வெடித்துத் திறந்திருக்கும் கல்லறை சந்தேகத்தின் மேல் எழுப்பப்பட்ட நம் கேள்வி களை மென்று ஜீரணிக்குமா? கல்லறை வாயிலில் நின்று நாமும் சந்தேகிக்கின்றோம். உயிர்த்தெழுதல் எப்படி நடந்ததென்பது வேதத்தில் விபரிக்கப்படவில்லை. நடந்து முடிந்தபின் ஏற்பட்ட சம்பவங்களே வரலாற்றிற் குறிப்பிடப்பட்டுள்ளன. மனிதர் எவரும் நேரிற் காணவில்லை. அது தனியே கர்த்தர் ஒருவராக் நிறைவேற வேண்டிய காரியமாய் இருந்ததால் அப்படி நடந்தது. அவர் ஒருவரே அதைச் செய்ய வேண்டியபடி செய்து முடித்தார். அப்படியாயின் எப்படி உயிர்த்தெழுதலின் உண்மைத் தத்துவத்தை நிச்சயிப்போம்? மெய்யாகவே அவர் உயிர்த்தெழுந்தார் என்று வேதம் கூறுகிறதே!

(தொடரும்)

## இயேசு "எல்லாம் முடிந்தது" என்றூர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வையன்றி வேறெருவராலும் இரட்சிப்பில்லை என்பது தெளிவாயிற்று.

எதிலிருந்து நாம் இரட்சிக்கப்படுகிறோம்...? பாவத்திலிருந்தும், பாவத்தினுல் வரும் பலாபலன்களினின்றும் இரட்சிக்கப்படுகிறோம் என்பது புதிய ஏற்பாடு பகரும் விடை. "உலகத்தவர் குற்றத்தீர்ப்புகளிலிருந்து மீட்புப் பெறவே மனுமைந்தர் உலகத்திற்கு வந்தார்" (யோவான் 3:17). இறைமைந்தன் இயேசுவின் சிலுவை மரணத்தினுல் நிறைவு பெற்ற இவ்விரட்சிப்பு என்னும் கிருபையின் ஈவு மக்களனைவருக்கும் அருளப்பட்டுள்ளது. கடவுளின் இம்மகா உன்னத செயலை நாம் ஏற்குமிடத்தில் இரட்சிப்பின் வாக்குறுதியைப் பெறுக் (உரோ: 4:16) கொள்கிறோம். "கிறிஸ்து யேசுவின் மூலம் கடவுள் நமக்குக் காட்டிய பரிவும், அவரது அளவற்ற செல்வமுமாகிய அந்த அருளாலே நம்பிக்கையின் மூலம் நாம் மீட்கப்பட்டுள்ளோம். இது எங்களால் நடந்ததன்று. அது கடவுளின் இலவச ஈவு. இது மனித செயலால் நடைபெருததால் இதில் தற்பெருமை கொள்ள எவருக்கும் இடமில்லை." (எபே: 2:7-9) இத்தகைய மகா உன்னத இரட்சிப்பை அசட்டை பண்ணுமல, நாம் இரட்சிக்கப்பட்டுளோம்; நாம் கடவுளின் கைவேலைப்பாட்டினுல் கிறிஸ்து இயேசுவுடன் இணைக்கப்படுவோம், என்பதனை ஏற்பது எங்கள் மேல் ஏற்படுத்தப்பட்ட மாபெரும் பொறுப்பு. உத்தரவாதம்,

"நீங்கள் அடைந்த, பெற்றுக்கொண்ட மீட்பு நிறைவு பெறும்படி அச்சத்தோடும் நடுக்கத்தோடும் செயல்புரிந்து வாருங்கள். ஏனெனில் கடவுள் தாமே உங்கள் உள்ளத்தில் செயல்புரிந்து வருகிறார்." (பிலி: 2:13)

கிறிஸ்துவில் நிறைவு பெற்ற இரட்சிப்பு என்னும் மீட்பின் வெற்றிக்கொடியைக் கையேற்று, உலகின் விண் சுடர்களாக ஒளி வீசுவோம்-கேளீர்! அவரது திருவருள் மட்டுமே போதும் என துணிவுடன் உரைப்போம். வாரீர்!

உலகே உனதாயினும் தலை சாய்க்கத் தாவில்லாமல் நலமே புரிந்து திரிந்தாய்; எல்லாம் துறந்து யாவும் உன நலமாக்கி கொண்டுழைக்க, வல்லா, உனின் சிலுவை அலலால் வழி பவறு உண்டோ...?

*EDITORIAL*

## The TULF at Historic Sri Jeyawardenapura

Minister Ananda Tissa de Alwis, the sixth and last speaker at the ceremonial Opening of the New Parliamentary Complex at Sri Jeyawardenapura, seems to have scored a point, at the expense of the TULF, though his comments were made facetiously.

The Minister alluding to those who "spoke from the North in different tones", said:—

"If ever you want to resuscitate that ancient Kingdom of Nallur, *you will find in common with us the difficulty that you cannot agree who will lead it.*" If ever such an eventuality arises, we will be glad to persuade Cyril Mathew to come and assist you to be its King.

Your Excellency, on behalf of all of us, I am told, by the Prime Minister that Mr. Mathew has expressed that he is ready, willing and able."

(Italics are ours)

While we concede that it is not necessary to make the Opening of the New Parliament of Sri Lanka an austere occasion at every stage, it is at the same time important that we do not appear to make light of, or underrate the significant role the new "Temple of Democracy" has to play in Sri Lanka today in a multi-racial, multi-religious country which has had in recent times more than its share of ethnic conflicts.

What the Leader of the Opposition was at pains to emphasise was, in our view, that if partnership in democracy is the corner stone of the new edifice of the Development Council, *Nallur* has as much historical halo round it, in the North of the country, as Kotte has, in the South.

Whatever may be the purport of the message Minister de Alwis intended to convey, with his pointed reference to the person who could be elevated to the monarchy at Nallur (if the Tamil people could not agree on a choice), the TULF has to take a cue from his speech.

We should admit that some events in Jaffna immediately preceding the Kotte Inaugurals were not very auspicious to the Tamil cause.

On 26-4-82, two political factions are reported to have met at the foot of the Chelva Memorial in Jaffna to honour their departed leader on his fifth death anniversary.

One was *the Tamil United Liberation Front* led by Mr. A. Amirthalingam and the other was the *Tamil Eelam Liberation Front*, led by Dr. S. A. Tharmalingam.

Each group had its own programme of Devotional and held its own public meeting at the end of the Devotions, with only about 30 yards of ground space seperating them. How far apart their thoughts were, it is difficult to surmise.

'Unity is best achieved amidst diversity' was the tenor of an editorial comment by our contemporary, *Eelanadu* on this meeting held at the Chelva Memorial site on 26-4-82.

But we wonder if this particular brand of 'diversity' does not smack of the unseemly features of the contemporary melodrama we are witnessing of the SLFP (S) and SLFP (M), one of which groups, we note, created a diversion at the Sri Jeyawardenapura Inaugural celebrations.

Detractors, of whom there are plenty in the country are sure to point out that the TULF is now revealing 'cracks' in its ranks which make its credibility as the only party representing Tamils, a matter of conjecture.

It is important the Tamil people realise that in all the changing fortunes of a bitter struggle for our ethnic survival (in our recent history) it was the TULF that was *in the heart of the struggle.*

All other parties were only bystanders who were in the words of the German Poet Reiner Rilke "spectators always, everywhere, looking *at* everything, never *from*". (Italics are ours)

The government too, on the wake of a dizzy moment in our parliamentary annals should reflect seriously on one cardinal feature of democracy.

It has been well expressed by Prime Minister Premadasa at the Fourth Annual Convention of the Lions Club (District 306 B) held at Negombo on 17-4-82:—

"We believe that it is *a sparely built, flexible government* which can work efficiently for the people. A government becomes fat and flabby and is immobile and lethargic when it grabs all powers for itself."

(Italic are ours) (CDN. 19-4-82).

## What They Said on May Day, 1982

**Freedoms Galore**

The people must not permit any dictator to trample them and if any such attempt is made, it should be resisted as the UNP did, during the previous government. What was the freedom the people of this country did not enjoy, freedom of the press freedom of expression, freedom of holding May Day Processions, if any one could name a freedom they felt is not there, please tell me and I will try to obtain it for you.

UNP — President J. R. Jeyawardena.

**The Lot of the Worker**

"The days when pillows were changed to cure a headache were no more. 45 lakhs of workers, peasants and the general masses could never be duped any longer. They cannot be made the tail or any other appendage of the bribe-takers, racketeers and tender-fixers. The sins of the past eight capitalist governments have taken their toll and the nation had been ruined."

JVP — Rohana Wijeweera.

**A Conspiracy**

"The conspiracy of mother and son is now clear. The new family combination — "USA" — mother, son and new nephew have collected a few so called leftists, mostly one man parties, to give themselves a progressive camouflage. The group will end in being an Anura — Upali group who stand for the continuation of the UNP policies. Why then do they have to defeat the UNP."

SLFP (M) — Mr. Maitripala Senanayake.

**Mass Demonstration**

"The people had lost confidence in the government. That was why the UNP was holding musical parties on May Day instead of the usual rallies. The fifth May Day rally organised by the six party group led by the SLFP this year was the biggest ever May Day Rally held in this country." Their rally took several hours to pass one point.

SLFP (M) — Mrs. Srima Bandaranayake.

**The Tamils and Development Councils**

"Tere is very little use in Development Councils. The government wants the Development Councils to function with the people's resources and not with government funds. The people in the South are not willing to do so. In this context, how can the Tamil people benefit by these Councils."

Secy. Northern Branch of the CP (Shan group).

**The Youth should not be Sacrified**

"We are passing through critical times. We cannot condone the malicious propaganda of a section among the Tamils to bring about a division among the Tamils. Let us not sacrifice the youth of our land at the altar of self-interest and political expediency. The speech of Minister Ananda Tissa de Alwis at the Opening of the New Parliament is a grim reminder of what could happen if there is disunity among the Tamils."

TULF — Mr. A. Amirthalingam.

**Unable to accept Unity Calls**

"Although several parties were inviting them to a common platform to fight against the UNP, they were unable to accept unity calls, made by Parties which were in disarray and had no clear cut policies...... although Anura Bandaranayaka had left the SLFP (M) to join his mother, he was not acceptable to his sister, brother-in-law and several others.

The LSSP too had splintered into two factions. But both factions were on a common platform with Mrs. Bandaranayake."

Sri Lanka Communist Party — Peter Kenneman.

**A Symbol of Strength**

"The large crowd present at the United Left Rally, despite the absence of attractions like foreign film stars, was an unmistakable indication of their strength to topple the government. There were two elections round the corner. Under the present constituition the more important was the Presidential Election...... The reason why the Presidential Election would not precede the General Election was clear. The government objective is to take advantage fo the disunion in the Left."

LSSP — Dr. Colvin R de Silva.

*Obituary*

### Mr. J. K. Hastings

We regret to record the death which took place on 10-3-82 of Mr. Julius Kanagaratnam Hastings, retired Accountant, Trinity College Kandy.

The Funeral Service took place at the residence of his daughter, Mrs. Rohini Stephen in Colombo. Rev. Gamini Sevasinghe officiated assisted by Canon Ratnayake and Rev. Selton de Silva.

Julius is the grandson of the late Mr. William Mather of Navaly and brother of the late Herbert, Wilbert, Juliet, Rosa, Angelina, Regina and Mabel. He was associated with Trinity College for 40 years. He leaves behind two daughters — Mrs. Stephen (Colombo) and Mrs. Athukorale (USA).

### Sri Lankans' Remittances

Sri Lankans' employed abroad are the highest source of income for the government, according to informed sources. In 1981, they remitted Rs. 4400 million. The bulk came from Sri Lankans in West Asian countries.

Next to Tea, (Rs. 6444 million in 1981) Sri Lankans abroad have been the biggest source of income.

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QB./59/300/26/82.*
Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 7th May 1982 and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna.